# இயல் 7.7 - சதவீதமும் தனிவட்டியும்

பயிற்சி எண் :: 7.7.2.5.C

சதவீதமும் தனிவட்டியும் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - தநாஅபு - பயிற்சி 2.5 10-13

Percentage & Simple Interest - Day to day life problems

## சதவீதமும் தனிவட்டியும் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - தநாஅபு - பயிற்சி 2.5 10-13

10. 8 - ன் எத்தனை சதவீதம் 64?

கண்டுபிடிக்க வேண்டிய சதவீதத்தை $x$ என்க.

$$8 \text{ - ன் } x\% = 64$$

$$8 \times \frac{x}{100} = 64$$

$$x = \frac{64 \times 100}{8} = \frac{\overset{8}{\cancel{64}} \times 100}{\underset{1}{\cancel{8}}}$$

$$= 8 \times 100 = 800$$

∴ 8 - ன் $\boxed{800}$ சதவீதம் 64 ஆகும்.

11. ஸ்டீபன் என்பவர் தனது வங்கியின் சேமிப்புக் கணக்கில் ₹10,000 ஐ 2% தனிவட்டி வீதத்தில் முதலீடு செய்தார் எனில், 4 ஆண்டுகளின் முடிவில் அவர் பெறும் தனிவட்டி எவ்வளவு?

$$\left.\begin{matrix}\text{தனிவட்டி காணும்}\\ \text{சூத்திரம் } (I)\end{matrix}\right\} = \frac{\underset{\text{அசல்}}{P} \times \underset{\text{ஆண்டுகள்}}{N} \times \underset{\text{வட்டி வீதம்}}{R}}{100}$$

$$= \frac{10000 \times 4 \times 2}{100} = \frac{100\cancel{00} \times 4 \times 2}{1\cancel{00}}$$

$$= 100 \times 4 \times 2 = ₹800$$

∴ ஸ்டீபன் பெறும் தனிவட்டி $\boxed{₹800}$ ஆகும்.

12. ரியா என்பவர் மகிழுந்து வாங்குவதற்காக ₹15,000 ஐ 10% தனிவட்டி வீதத்தில் கடனாகப் பெற்றார். அவர் ₹9,000 ஐக் கடனை முடிக்கும் தருவாயில், வட்டியாகச் செலுத்தினார் எனில், கடனைப் பயன்படுத்திய காலத்தைக் கணக்கிடுக.

$$\left.\begin{matrix}\text{தனிவட்டி காணும்}\\ \text{சூத்திரம் } (I)\end{matrix}\right\} = \frac{\underset{\text{அசல்}}{P} \times \underset{\text{ஆண்டுகள்}}{N} \times \underset{\text{வட்டி வீதம்}}{R}}{100}$$

$$9000 = \frac{15000 \times N \times 10}{100} = \frac{150\cancel{00} \times N \times 10}{1\cancel{00}}$$

$$9000 = 150 \times N \times 10 = 1500 \times N$$

$$N = \frac{9000}{1500} = \frac{90\cancel{00}}{15\cancel{00}} = \frac{90}{15} = \frac{\overset{6}{\cancel{90}}}{\underset{1}{\cancel{15}}} = 6$$

∴ ரியா கடனைப் பயன்படுத்திய காலம் $\boxed{6}$ ஆண்டுகள் ஆகும்.

13. ₹3,000 அசலுக்கு ஆண்டுக்கு 8% என வழங்கப்படும் தனிவட்டியானது, ₹4,000 அசலுக்கு ஆண்டுக்கு 12% என 4 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் தனிவட்டிக்கு நிகராகும் காலம் என்ன?

$L.H.S(I_1) \Rightarrow$ $\boxed{P_1 = ₹3,000}$ $\boxed{R_1 = 8\%}$ $\boxed{N_1 = ?}$

$R.H.S(I_2) \Rightarrow$ $\boxed{P_2 = ₹4,000}$ $\boxed{R_2 = 12\%}$ $\boxed{N_2 = 4 \text{ ஆண்டுகள்}}$

$$\overbrace{\frac{P_1 \times N_1 \times R_1}{100}}^{I_1} = \overbrace{\frac{P_2 \times N_2 \times R_2}{100}}^{I_2}$$

$$\frac{3000 \times N_1 \times 8}{100} = \frac{4000 \times 4 \times 12}{100}$$

$$\frac{30\cancel{00} \times N_1 \times 8}{1\cancel{00}} = \frac{40\cancel{00} \times 4 \times 12}{1\cancel{00}}$$

$$240 \times N_1 \overset{①}{=} 40 \times 48 = 1920$$

$$N_1 = \frac{1920}{240} = \frac{192\cancel{0}}{24\cancel{0}} \overset{②}{=} \frac{192}{24} = 8$$

① 

```
    4 0
 ×  4 8
 ------
  3 2 0
1 6 0
 ------
1 9 2 0
```

② 

```
       8
24 ) 192
     192
     ---
       0
```

∴ தனிவட்டி ($I_1$ ஆனது $I_2$ க்கு) நிகராகும் காலம் $\boxed{8}$ ஆண்டுகள் ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 21st September, 2022 :: 14:23 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**